# 4 அனர்த்தங்களை முகாமை செய்வோம்.

அனர்த்தங்களினால் எமது நாளாந்த நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதுடன், சீவனோபாய வழிகள் மற்றும் உடைமைகள் அழிக்கப்படுதல், காயங்களுக்குள்ளாகுதல் அல்லது உயிரிழப்புக்கள் ஏற்படல் போன்ற நிலைமைகள் உருவாகின்றன. அனர்த்தங்களின் மூலம் ஏற்படும் உளத் தாக்கங்களும், பொருளாதார நடவடிக்கைகளின் அழிவுகளும் நாட்டின் அபிவிருத்திக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. விளைவுகள் தனிநபருக்கும், குடும்பத்திற்கும், பிரதேசத்திற்கும், நாட்டிற்கும் மற்றும் முழு உலகிற்கும் பல்வேறு வகைகளில் ஏற்பட முடியும். இதன் மூலம் தனிப்பட்ட, தேசிய மற்றும் சர்வதேச அடிப்படையில் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியான பிரச்சினைகளும் தோன்ற முடியும். 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி ஆசிய நாடுகளைப் பாதித்த சுனாமி கடற்பேரலை அனர்த்தம் இத்தகைய பாதிப்புக்களை ஏற்படுத்திய அனர்த்தங்களுள் ஒன்றாகும். அனர்த்தங்கள் ஏற்படுவதனை முழுமையாக நிறுத்த முடியாதுள்ள போதும், அனர்த்தங்களின் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ளலாம். இந்நடவடிக்கையே ''அனர்த்த முகாமைத்துவம்'' என்பதாக அறியப்படுகின்றது.

அனர்த்த முகாமை தொடர்பாக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து ஏற்படுத்தப்பட்ட சட்ட திட்ட விதிகள் உலகின் அநேகநாடுகளில் இருப்பது போன்று இலங்கையிலும் உருவாக்கப்பட்டுள்ளன. அத்துடன் அனர்த்தங்கள் தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், பயிற்சி வேலைத் திட்டங்கள் போன்றனவும் காணப்படுகின்றன. அனர்த்தங்களிலிருந்து தவிர்த்திருப்பதற்கு நவீன வழிமுறைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வலகினைக் கற்பதன் மூலம் மேற்படி அனர்த்த முகாமை தொடர்பான உங்களது அறிவை விருத்தி செய்யமுடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம் உங்களதும் ஏனையவர்களினதும் உயிர் மற்றும் உடைமைகளை அனர்த்தங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான தேர்ச்சியினை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

## 4.1 விபத்துக்கள் அனர்த்தங்கள் பற்றி அறிந்து கொள்வோம்

வாழ்க்கையின் சகல சந்தர்ப்பங்களிலும் எல்லா இடங்களிலும் அனர்த்தங்கள் மற்றும் விபத்துக்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது. அனர்த்தம் மற்றும் விபத்து காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை குழப்பமடைகிறது. இதன் காரணமாக அனர்த்தம் அல்லது விபத்து ஒன்று ஏற்படுவதற்கான சூழ்நிலை தொடர்பாக தொடர்ச்சியான அவதானத்துடன் இருப்பது அவசியமாகும். அத்துடன் அனர்த்தம் மற்றும் பாதிப்பு நிகழும் சந்தர்ப்பங்கள் தொடர்பாக முழுமையான புரிந்துணர்வும் அவதானமும் தமக்குள் ஏற்படுத்திக் கொள்ளப்படல் வேண்டும்.

உங்களுக்கும் வீட்டிலோ, பாடசாலையிலோ அல்லது அதற்கு வெளியிலோ இவ்வாறான சந்தர்ப்பங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டிருக்கலாம். அனர்த்தங்களும் விபத்துக்களும் ஏற்படுவதனை முழுமையாகத் தடுத்து நிறுத்த முடியாவிட்டாலும் முன்கூட்டியே அவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ளும் முன்னறிவை எமக்குள் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அவ்வாறான, விளக்க முன்னறிவுத் தன்மை ஏற்படவேண்டுமானால், நாம் எம்மைச் சுற்றி நடைபெறுபவற்றைப் பற்றிய நிரந்தரமான அவதானத்துடனும் ஆராய்வுடனும் இருக்க வேண்டியுள்ளது. அனர்த்தமொன்று நிகழும்போது உரிய வகையில் நடந்து கொள்ள வேண்டிய வழிமுறைகள் தொடர்பாக நாம் அறிந்திருப்பதும் அவசியமாகும்.

## 4.2 பல்வேறு அனர்த்த வகைகள்

நாம் வாழும் இடங்களைச் சூழ நாளாந்தம் எதிர்கொள்ள நேரிடுகின்ற அனர்த்தங்கள் மற்றும் விபத்துக்கள் தொடர்பான விபரங்களைக் கீழே காட்டப்பட்டுள்ள பத்திரிகைச் செய்தித் தலைப்புக்கள் மற்றும் புகைப்படங்கள் காட்டுகின்றன.

கட்டாக்காலி நாய்களின் கடிக்குள்ளாகி சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

தொலைக்காட்சி அன்ரனாவை திருத்தும் போது மின்கம்பத்திலிருந்து மின்சாரம் தாக்கி பொதுமகன் பலி



மண்சரிவினால் வீடுகள் குடியிருப்புகளுக்கு சேதம் போக்குவரத்து பாதிப்பு



இலவச விநியோகத்திற்காக

இடி மின்னல் பாதிப்புகளில் இருந்து பாதுகாப்பாக இருப்பது பற்றி வளிமண்டலவியல் திணைக்களம் மக்களுக்கு அறிவுறுத்தல்.





மின்சார ஒழுக்கு காரணமாக வீடு தீயில் எரிந்து நாசம், குடும்பத்தவர் காயப்பட்டனர்.

எதிரணி வீரரைத் தனது பாதணியால் தாக்கினார் கால்பந்தாட்ட வீரர், பாதிக்கப்பட்டவர் காயம்

மிதிவெடியில் அகப்பட்ட பஸ்வண்டி பாதையை விட்டு விலகி மரத்தில் மோதி விபத்துக்குள்ளாகியது.பலர் படுகாயம்



புகையிரதம் தடம்புரண்டு குடைசாய்ந்தது 20 பயணிகள் காயம்



பல மெற்றிக் தொன் எடையுள்ள பொருட்களை ஏற்றி வந்த சரக்குக் கப்பல் நீரில் மூழ்கியது. சிப்பந்திகளும், ஊழியர்களும் காப்பற்றப்பட்டனர்.

கடல் பெருக்கு் காரணமாக கரையோரக் குடும்பங்களில் 100க்கு மேற்பட்டோர் இடம் பெயர்வு

நீராவிக் கொள்கலன் வெடித்ததில் அரிசி ஆலை ஊழியர் பலி

இரசாயனப் பொருட்கள் அடங்கிய போத்தல் வெடித்ததால் காயமடைந்த மாணவர் வைத்தியசாலையில் அனுமதி - பாடசாலையில் சம்பவம்



இலவச விநியோகத்திற்காக

தரப்பட்ட படங்களையும் பத்திரிகைச் செய்தித் தலைப்புகளையும் நன்கு அவதானித்துப் பாருங்கள். நாம் எதிர்கொள்ளக்கூடிய பல்வேறு அனர்த்தங்கள், மற்றும் விபத்துக்களின் வகைகள் பற்றிய தெளிவை இவற்றின் மூலம் நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும். இதன்மூலம் அனர்த்தங்களும், விபத்துக்களும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில், வெவ்வேறு வகைகளில் ஏற்படுகின்றன என்பதை நீங்களும் புரிந்திருப்பீர்கள்! அனர்த்தம் அல்லது விபத்து ஏற்படக்கூடிய நிச்சயமான இடத்தை எம்மால் குறிப்பிட முடியாது. அவை வீடு, பாடசாலை, வெளிச்சூழல் வேலைத்தளம், தெருக்கள், தொழிற்சாலை போன்ற எந்தவொரு இடத்திலும் நடைபெறலாம். அத்துடன் நாளில் எந்தவொரு நேரத்திலும் இத்தகைய அனர்த்தங்களும் விபத்துக்களும் நேரலாம்.

ஆனால் அனர்த்தங்கள் ஏற்படும் என்று நினைத்து எமது பணிகளையும், வேலைகளையும் தாமதிக்கவோ அல்லது கைவிட்டுவிடவோ கூடாது. அவ்வாறு செய்வது நல்லதன்று. எம்மைச் சுற்றி அனர்த்தம் அல்லது விபத்து ஏற்படுவதற்கான அறிகுறிகள் காணப்படலாம். அத்தகைய நிலைமைகளில் அவதானத்துடனும் புத்திசாதுரியமாகவும் செயற்பட வேண்டும் என்பதனை நன்கு நினைவில் நிறுத்திக் கொள்ளுங்கள்.

### செயற்பாடு 4.1

மேலே தரப்பட்டுள்ள பத்திரிகைச் செய்தித் தலைப்புக்கள் மற்றும் புகைப்படங்களின் மூலம் காட்டப்பட்டுள்ள விபத்துக்கள் மற்றும் அனர்த்தங்கள் பற்றியும், அவை நடைபெறும் இடங்களின் அடிப்படையில் வகைப்படுத்தி கீழ்க்காணப்படும் அட்டவணையில் பூரணப்படுத்துங்கள். உங்களுக்குத் தெரிந்த மற்றுமொரு விபத்து வகை ஒன்றையும் அட்டவணையில் உட்படுத்துங்கள்.

| வீட்டை அண்டிய பகுதி | பாடசாலையை அண்டிய பகுதி | சுற்றுப்புற வெளிச்சூழல் | வேலைத்தளம் | வேறு |
|---|---|---|---|---|
| | | | | |

விபத்து, அனர்த்தம், பாதிப்பு, அழிவு போன்றவகையில் எந்தச் சொற் பதங்களால் அறியப்பட்டாலும் விபத்து, மற்றும் அனர்த்தம் என்பது எமக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் தாக்கம் செலுத்துகிறது.

**எதிர்பாராத சந்தர்ப்பமொன்றில் ஏதாவது காரணங்களின் மூலம் தனிநபர் ஒருவருக்கு அல்லது பல நபர்களுக்கு காயத்தை ஏற்படுத்துதல், உயிரிழப்பை ஏற்படுத்துதல் மற்றும் உடைமைகளுக்கு அழிவை ஏற்படுத்துதல் போன்ற இயல்புகளை உள்ளடக்கியதாக நடைபெறக்கூடியது விபத்து என்று அழைக்கப்படுகின்றது.**

அதிவேகமாக வாகனங்களைச் செலுத்துதல், முறையற்ற விதத்தில் இயந்திர சாதனங்களை உபயோகித்தல், இரசாயனங்களைப் பயன்படுத்துதல் போன்ற வேளைகளில் விபத்து ஏற்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் அல்லது விபத்திற்குள்ளாகுவோரின் எண்ணிக்கை அதிகரித்தல் அல்லது அவற்றின் மூலம் ஏற்படும் பாதிப்பு அதிகரித்தல் என்னும்போது அது விபத்து என்பதாக அறியப்படுகிறது. விபத்துக்களை விடக் கூடுதலான அழிவுகள் ஏற்படுவதன் மூலம் நிர்மாணங்கள், கட்டமைப்புக்கள் என்பவற்றுக்குப் பாதிப்பை ஏற்படுத்துதல் அனர்த்தம் ஆகும். அழிவுகள் என்பது நாட்டுக்கு அல்லது தேசத்திற்கு பொருளாதார சமூக மற்றும் அரசியல் ரீதியாக தாக்கத்தினை ஏற்படுத்துவது ஆகும். 2004ஆம் ஆண்டில் ஆசியாவில் ஏற்பட்ட சுனாமி நிகழ்வு **''சுனாமி அழிவு''** என அழைக்கப்படுகின்றது.

## 4.3 அனர்த்தங்கள் நிகழும் சந்தர்ப்பங்கள்

**விழாக்கள் கொண்டாட்டங்களின்போது விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுப்பது பற்றி பொலிசார் எச்சரிக்கை.**

மேலேயுள்ளது போன்ற பத்திரிகைச் செய்திகளை நீங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் வாசித்திருப்பீர்கள். விசேடமாகப் பெருநாட்கள் , விழாக்கள் மற்றும் பண்டிகைகளின்போது ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் அதிகரித்து வருவதன் காரணமாக அது தொடர்பாகப் பொதுமக்களை அறிவுறுத்துவதற்காக பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சிகளில் செய்திகள் வழங்கப்படுகின்றன. நத்தார்ப் பண்டிகை, சிங்கள-தமிழ்ப் புத்தாண்டு போன்ற பண்டிகைக் காலங்களில் மகிழ்ச்சியைக் கொண்டாடுவதற்காக பட்டாசுகள், பூவெடி, வானவெடி, சக்கரவெடி, சப்த வெடிகள் கொளுத்தப்படுகின்றன. அவதானத்துடன் அவற்றைக் கவனமாகக் கையாளாததன் காரணமாக உடல்ரீதியான காயப்படல் சம்பவங்கள் சில சந்தர்ப்பங்களில் உயிரிழப்புகள் கூடஏற்படுகின்றன.

அதேபோன்று சிறு பிள்ளைகள் இருக்கும் வீடுகளில் மின்சார ஆளிகளை (சுவிட்சுகளை) அவர்களுக்கு எட்டக்கூடிய உயரத்தில் பொருத்தாதிருப்பதற்குக் கவனம் செலுத் துதல் வேண்டும். மருந்து வகைகள், கூரான பொருட்கள், இலகுவில் உடையக் கூடிய பொருட்கள், மின் உபகரணங்கள் போன்றவை பிள்ளைகளுக்கு எட்டாத இடங்களில் பாதுகாப்பாக வைக்க வேண்டும். மாடிவீடுகளில் வசிக்கும்போது சிறுபிள்ளைகளின் பாதுகாப்பு தொடர்பில் கூடிய அவதானம் செலுத்துதல் வேண்டும். அதே போன்று அதிக மழை ஏற்படும் சந்தர்ப்பங்களின்போது அனர்த்தங்களும் விபத்துக்களும் ஏற்படுவதற்கு அதிக வாய்ப்பு இருப்பதனால் நாம் அத்தகைய சந்தர்ப்பங்களின் போது விசேடமாக அவதானத்துடன் இருக்க வேண்டும்.


பாதுகாப்புடன் மின்சார பராமரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடல்

மேலும் அனர்த்தங்களும், விபத்துக்களும்பற்றி நோக்கும்போது மிருகங்கள், ஜீவராசிகள், குறிப்பாக பாம்பு போன்றவைகளால் ஏற்படும் ஆபத்துக்கள் குறித்துக் கவனம் செலுத்துதல் வேண்டும். பாம்புக்கடி காரணமாக மரணமடைவோர்களின் எண்ணிக்கை உயர்வடைந்திருக்கின்ற அதேவேளை அவற்றின் மூலமான பாதிப்புக்களும், தாக்கங்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன. எனவே இரவு வேளையில் வெளியே பிரயாணம் செல்லும் போது மிகவும் கவனத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

தற்காலத்தில் காட்டு யானைகளின் தாக்குதல்களும் மனிதர்கள் மீது அதிகரித்துள்ளன. காட்டு யானைகளின் தாக்குதல்களால் மரணத்தைத் தழுவுதல் மற்றும் காயங்களுக்கு உள்ளாகுதல் சந்தர்ப்பங்களும் அதிகரித்துள்ளன. ஆகையால் இத்தகைய உயிரினங்கள் காணப்படும் பிரதேசங்களில் வாழும் மக்கள் அத்தகைய அனர்த்தங்களிலிருந்து தவிர்ந்திருப்பது பற்றிய அறிவுடையோராக இருத்தல் மிகவும் அத்தியாவசியமாகும்.


காட்டு யானை மூலம் ஏற்படுத்தப்படும் அனர்த்தம்

**செயற்பாடு 4.11**

**கீழ்வரும் சம்பவத்தை வாசியுங்கள்.**

வசந்தன் 9 ஆம் தரத்தில் படிக்கும் ஒரு மாணவன். அவனது வீடு வயல்வெளிக்கு அருகில் அமைந்துள்ளது. வயலின் ஒரு ஓரத்தில் கால்வாய் ஒன்று ஊடறுத்துச் செல்கின்றது. மழைக்காலங்களில் கால்வாயின் நீர் இருமடங்காக நிரம்பி வழியும். மழைக்காலத்தில் நெல் வயல் நீரில் மூழ்கி நீர் நிரம்பிய குளமாகக் காட்சி தரும். ஒரு நாள் கால்வாய் நிரம்பியிருந்ததை அறிந்த வசந்தனும் அவனது நண்பர்களான கலீல் மற்றும் குமார் ஆகியோர் வாழைத்தண்டுகளைக் கொண்டு தெப்பம் கட்டி விளையாடினர். தெப்பத்தில் சிறிது தூரம் சென்றதும் வினோதமாக மகிழ்ந்தனர். அதிக நேரம் செல்லவில்லை. நீரினுள் இருந்த மரக்கட்டை ஒன்றில் மோதி தெப்பம் கவிழ்ந்து அவர்கள் கீழே விழுந்தனர். அதிஷ்ட வசமாக நீரினுள் இவர்கள் விழுந்ததைக் கண்ட இரு இளைஞர்கள் உடனே செயற்பட்டு அவர்களின் உயிரைக் காப்பாற்றி வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர். உரிய சிகிச்சை வழங்கப்பட்டு குணமடைந்தனர்.

வசந்தனும் அவனது நண்பர்களும் பின்பற்றிச் செயற்பட்ட முறை தொடர்பில் உங்களின் கருத்து யாது?

ஓய்வு வேளைகளைப் பயனுள்ளதாக உபயோகிப்பதற்காக மகிழ்ச்சி, வினோதத்தை பெற்றுக் கொள்ளும் நோக்கத்தைக் கொண்டுள்ள அநேகமானோர் வினோத சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்வர். இவ்வாறான சுற்றுலாக்களின் போது கண்மூடித்தனமாகச் செயற்படல், அனர்த்தம் அல்லது விபத்து நிகழ்வதற்கு முக்கிய காரணமாகிறது. வினோதமாக சுற்றுலாக்களின்போது பாதுகாப்பற்ற இடங்களுக்குச் சென்று குளிப்பதனால் தமது உயிர்களைப் பறிகொடுக்கும் நபர்கள், வாகனங்களைச் செலுத்தும்போது அதிக சப்தத்துடன் பாடல்களை ஒலிக்கச் செய்வதனால் ஏற்படும் விபத்துக்கள் தொடர்பாக பத்திரிகைகளில் செய்திகள் வருவதனைக் காணலாம். கல்விச் சுற்றுலாக்கள், வினோதச் சுற்றுலாக்களின்போது மகிழ்ச்சி, குதூகலத் தன்மை ஆகிய உணர்வுகள் எமக்குக் கிடைக்கின்றன. இவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் நாம் மிகவும் புத்திசாதுரியத்துடனும், சிந்தனையுடனும் தொழிற்படவேண்டும். வினோதச் சுற்றுலா துக்ககரமான வகையில் அமையாத வகையில் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். அனுமதிக்கப்படாத, பழக்கமில்லாத இடங்களில் சென்று நீரில் குளித்தல், பாதுகாப்பற்ற இடங்களில் தங்குதல் போன்ற விடயங்கள் தொடர்பில் மிகவும் அவதானத்துடன் இருப்பது பொருத்தமானது.

அதேபோன்று சிகிரியா, அம்புலுவாவ போன்ற இடங்களுக்கு சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்வோர் தேனீ, குளவிக்களின் தாக்குதலுக்கு உள்ளாகும் நிகழ்வுகளும் அடிக்கடி நடைபெறுகின்றன. ஒரு குறிப்பிட்ட சிலர் அவ்வாறான இடங்களில் முறையற்று நடந்துகொள்வதனால் பிறரும் பாதிப்பை எதிர்நோக்கும் நிலை ஏற்படுகிறது.


இலவச விநியோகத்திற்காக

## 4.4 இயற்கையாகவும் மனித செயற்பாடுகள் காரணமாகவும் நடைபெறும் விபத்துக்களும் அனர்த்தங்களும்

விபத்துகள் அல்லது அனர்த்தங்கள் என்பவற்றை அவை நடைபெறுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்த முடியும். அவ்வாறான வகைப்படுத்தல் கீழே அட்டவணை 4.1 இல் தரப்பட்டுள்ளது. அவற்றை அவதானியுங்கள்.

4.1 அனர்த்தங்கள் மீது தாக்கம் செலுத்தும் காரணிகளைக் கொண்டு வகைப்படுத்தல்

| காரணம் | | அனர்த்த வகை |
|---|---|---|
| இயற்கையாக | பௌதீக மற்றும் காலநிலைக் காரணிகள் | தீவிபத்து, பூமியதிர்ச்சி, சுனாமி அனர்த்தம், மண்சரிவு தாழமுக்கம், சூறாவளி, புயல், வெள்ளப்பெருக்கு, வரட்சி, காட்டுத்தீ, இடிமின்னல். |
| | உயிரியல் காரணிகள் | தொற்று நோய்கள், ஆபத்தான தாவரங்கள், காட்டுவாழ் உயிரினங்களால் ஏற்படும் ஆபத்துக்கள் |
| மனித செயற்பாடுகளால் | | வாகன விபத்து, தீப்பிடித்தல், கட்டடங்கள் இடிந்து வீழ்தல், விஷமான பொருட்களை அருந்துதல், நச்சு வாயு வெளியேறுதல். |

### இயற்கையாக ஏற்படும் அனர்த்தங்கள்

இயற்கையாக ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் மனித வாழ்க்கை மிகவும் கீழ்மட்ட நிலைக்குள்ளாவதற்குக் காரணமாகின்றன. அவ்வாறான அனர்த்தங்கள் மனிதர் நாளாந்த இயல்பு வாழ்க்கையை மேற்கொள்வதில் பாதிப்புச் செலுத்துகின்றன. அத் தகைய சந்தர்ப்பங்கள் உருவாகுவதற்கு முன்பு அனர்த்தங்கள் நடைபெறக்கூடிய முன்னறிகுறிகள் தொடர்பாக நாம் அவதானத்துடன் இருக்க வேண்டும். உதாரணமாக இடி, மின்னல் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். இடிமுழக்கம் காணப் படுகின்றதாயின் மின்னல் தாக்கம் ஏற்படக்கூடிய பிரதேசத்தில் நீங்கள் இருக்கின்றீர்கள் என்பதையிட்டு முதலில் கவனம் செலுத்துங்கள். அவ்வேளையில் மிகவும் விரைவாகச் செயற்படுவது அவசியமானது. மரங்களுக்குக் கீழே மற்றும் திறந்த வெளிப்பகுதிகளுக்குச் செல்லாது பாதுகாப்பான இடமொன்றுக்குச் செல்லுதல், மண்வெட்டி, அலவாங்கு,



4.3 வெள்ளப் பெருக்கு



இலவச விநியோகத்திற்காக

கோடரி போன்ற உலோகத்தினாலான பொருட்களைப் பயன்படுத்தாதிருத்தல், வானொலி, தொலைக்காட்சி போன்ற மின்சார உபகரணங்கள் எதனையும் பயன்படுத்துவதிலிருந்து விலகியிருத்தல். தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி முதலியவற்றை உபயோகிக்காதிருத்தல் போன்ற பாதுகாப்பான வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதனை உணர்ந்து கொள்ளுங்கள்.

அதிக மழையுடன் கூடிய காலநிலை ஏற்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் சூறாவளி, மண்சரிவு, வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடிய வாய்ப்பு காணப்படுவதை அறிந்து, அதற்கேற்ப அவதானத்துடன் எமது செயற்பாடுகளை மேற்கொள்வது அவசியம். இவ்வாறான சந்தர்ப்பங்களின்போது மின்சாரத் தடைகளும் ஏற்படக்கூடும். அதற்கேற்ப பாதுகாப்பான வழிமுறைகளைத் திட்டமிட்டுக் கொள்வது முக்கியமானது. உதாரணமாக: மின்தடை ஏற்படும்போது பயன்படுத்துவதற்கான மெழுகுதிரி, மின்சூல், தீப்பெட்டி போன்றவற்றைத் தயாராக வைத்துக் கொள்ள வேண்டும். ஆகவே சந்தர்ப்ப சூழ்நிலைகளின் போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பான வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் நாம் விபத்து மற்றும் அனர்த்தங்களின் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைத் தடுக்கவும், குறைக்கவும் முடியுமாயிருக்கும்.

## மனித செயற்பாடுகளால் ஏற்படும் விபத்துக்கள்

மனிதர்களின் நடவடிக்கைகளாலும் விபத்துக்களும் அனர்த்தங்களும் ஏற்படுகின்றன. எனினும் பொதுவாக மனித நடவடிக்கைகளினால் பெரியளவிலான விபத்துகளும் அனர்த்தங்களும் குறைவாகவே ஏற்படுகின்றன. அதே நேரம் சில பொருத்தமற்ற மனித நடவடிக்கைகளால் இயற்கை அனர்த்தங்களின் பாதிப்புக்கள் தீவிரமடைகின்றன. உதாரணமாக மரங்களை வெட்டுதல், காடுகளை அழித்தல் என்பன நீண்ட காலத்திற்கு வரட்சி நிலவுவதற்குக் காரணமாகின்றன. முருகைக் கற்பாறைகளை உடைத்தல், கரையோர கண்டல் தாவரங் களை அழித்தல், கடல் வாழ் தாவரங்களை அழித்தல் போன்றவற்றினால் கடலரிப்பு, சுனாமிப் பேரலை அனர்த்தம் போன்ற பாதிப்புக்கள் தீவிரமடையலாம்.


4.4 காடழிப்பு

**செயற்பாடு III**

பத்திரிகை ஒன்றில் வெளிவந்த சம்பவம் ஒன்று கிழே தரப்பட்டுள்ளது. அவற்றை வாசித்து அறியுங்கள்.

பத்தன பிரதேசத்திலுள்ள சமகிபுர கிராம மக்கள் தமது அனைத்து நீர்த்தேவைகளையும் கிராமத்தினூடாகச் செல்லும் ஆற்றிலிருந்தே பெறுகின்றனர். கிராமத்தின் கிழக்கு மூலையினூடாகப் பாய்ந்து செல்லும் ஆற்றுநீர் மக்களுக்கு குடிப்பதற்கும், குளிப்பதற்கும், அவர்களின் கால்நடைகள், வயல்கள் சேனைகளுக்கும் நீண்டகாலமாகப் பயன்பட்டு வருகிறது. ஆனால் மூன்று வருடங்களாக ஆற்றின் மேற்கு ஓரத்தில் அமைக்கப்பட்ட தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் அசுத்த நச்சுக் கழிவுகள் காரணமாக மக்கள் நீரைப் பயன்படுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தற்போது ஆற்றுநீரின் நிறம் மாற்றமடைந்துள்ளதுடன், ஆற்றுமீன்களும் செத்து மடிந்து வருவதாகக் கூறப்படுகின்றது. அதேவேளை இதனைப் பயன்படுத்தும் மக்களும், சிறுவர்களும் பல்வேறு நோய்களுக்கு ஆளாக நேரிட்டுள்ளதாகத் தெரியவருகிறது. மென்மேலும் இந்த நிலைமை அதிகரித்து வருவதனால் அக்கிராம மக்களின்வாழ்வு மோசமாகப் பாதிக்கப் பட்டுள்ளதோடு எதிர்காலத்தில் பெரும் ஆபத்தைத் தோற்றுவிக்கலாம் எனக் கிராம வாசிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

(1) நீர் பெற்றுக்கொண்ட விளக்கத்திற்கேற்ப மேற்படி நிலைமைக்கு முக்கிய காரணம் யாது?

(11) இந்நிலைமையைத் தவிர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய சட்டபூர்வமான வழிமுறை பற்றிய ஆலோசனை ஒன்றை முன்வையுங்கள்.

## 4.5 உணவு மற்றும் மருந்துகளால் ஏற்படும் அனர்த்தங்களை அறிந்துகொள்வோம்

விபத்துக்கள் மற்றும் அனர்த்தங்கள் போன்றவை உணவினாலும், மருந்து வகைகளாலும் ஏற்படும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன.

**உணவு நஞ்சாகியதால் விடுதி மாணவர் 40 பேர் வைத்தியசாலையில் அனுமதி! இரண்டு பேரின் நிலை கவலைக்கிடம்.**

பத்திரிகைகளிலும், செய்தி அறிக்கைகளிலும் காணப்படும் மேற்படி செய்திகளை நீங்கள் அறிந்திருப்பீர்கள். உணவு நஞ்சாகுவதன் காரணமாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு மரணமடைவோரும் உள்ளனர். உரிய வகையில் துப்புரவு செய்து உணவு வகைகளை உட்கொள்ளாமையினாலும், காலாவதியடைந்த உணவுகளைச் சாப்பிடுவதனாலும் உணவுகளை உரிய வகையில் சமைக்காது போவதாலும் உணவு நஞ்சாகுதல் நிகழுகின்றது. அதேபோன்று இயற்கையான உணவுப் பொருட்களுக்கு மேலதிகமாக தயாரிக்கப்படும் உணவுகளைத் தினமும் உட்கொள்வதன் காரணமாக பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

மருந்து வகைகளை மூடிப் பாதுகாப்பாக வைக்காததனாலும், பீடை நாசிகள், கிருமிநாசினிகள் போன்றவற்றை பாதுகாப்பாகக் களஞ்சியப் படுத்தாதனாலும் திடீர் அனர்த்தங்கள் ஏற்படக்கூடும். குறிப்பாக சிறிய பிள்ளைகள் இருக்கின்ற வீடுகளில் மருந்துகளை அவர்களின் கைகளுக்கு எட்டாத உயரத்தில் வைத்தல் வேண்டும். குழந்தைகளுக்கு மருந்தூட்டும்போது விடயமறிந்த முதியவர் ஒருவரது உதவியைப் பெற்றுக்கொள்வதன் மூலம் புரையேறுதல் மூலம் ஏற்படும் பாதிப்பைத் தடுக்கலாம்.

**மருந்து வகைகளைப் பயன்படுத்தும்போது பின்வரும் விடயங்கள் தொடர்பாக அவதானம் செலுத்துங்கள்**

* வைத்தியரின் அனுமதி ஆலோசனையின்றி மருந்துகளைப் பயன்படுத்தாதிருத்தல்.
* மருந்துகளை உரிய அளவுகளில் உட்கொள்ளல்.



* மருந்து வகைகளை உரிய இடங்களில், உரிய பெயர்களைப் பொறித்து களஞ்சியப்படுத்தி வைத்தல்.
* மருந்துப் பொருட்கள் காலாவதியடையும் திகதி பற்றி அறிந்திருத்தல்.
* மருந்துகளை உரிய வெப்பநிலையில் களஞ்சியப்படுத்திப் பாதுகாத்தல்.
* மருந்துகளைப் பாவிப்பதற்கு முன்னர் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் முறைகளையும் கவனமாக வாசித்து அறிதல்.

பிழையான வழிமுறைகள் மற்றும் தவறான பின்பற்றல்களாலும் விபத்துக்கள் நிகழுகின்றன.உதாரணமாக வாகனத்தைச் செலுத்தும்போது கையடக்கத் தொலைபேசியினைப் பயன்படுத்துதல், அதிக வேகமாக

வாகனங்களைச் செலுத்துதல், புகைபிடித்தல், பிழையான உணவுப் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். எமது பழக்கவழக்கங்கள் குறிப்பாக எண்ணெய் வகைகள், சீனி, கொழுப்பு போன்றவற்றை நிதமும் உணவுடன் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளல். உரிய வகையில் உடற் பயிற்சிகளை மேற்கொள்ளாதிருத்தல் போன்றனவும் பலவித நோய்களுக்கு காரணமாகின்றன. அவற்றின் மூலம் ஏற்படும் ஆபத்து மற்றும் பாதிப்புக்கள் குறித்தும் நாம் கவனம் செலுத்தி அவற்றைத் தடுப்பதற்கு முயல வேண்டும்.

## 4.8 விபத்துக்களையும் அனர்த்தங்களையும் தவிர்ப்போம்

அனர்த்தங்கள், விபத்துக்கள் என்பன எம்மைச் சுற்றியுள்ள யாவருக்கும் பொதுவானவை என்பதை இப்பாடத்தின் முற்பகுதியில் அறிந்திருப்பீர்கள். அந்த அறிவு, அனுபவங்களிலிருந்து கிடைக்கும் அவதானம் மற்றும் விளக்கங்கள் என்பன அனர்த்தங்களையும் , விபத்துக்களையும் தடுப்பதற்கும், அவற்றின் மூலம் ஏற்படக்கூடிய இழப்புக்களைக் குறைத்துக் கொள்வதற்கும் உதவுகின்றன. நீங்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு விபத்துக்கள் மற்றும் அனர்த்தங்களின் போது செயற்பட வேண்டிய ஒழுங்குகள் கீழே உதாரணம் மூலம் தரப்படுகின்றன. அவற்றை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ளுங்கள்.

**அனர்த்தச் சந்தர்ப்பம் :- சூறாவளி**

**சூறாவளி ஏற்படுவதற்கு முன்பு :-**

* வீட்டைச் சூழவுள்ள மதில்கள், சுவர்களின் பாதுகாப்புத் தொடர்பாகக் கவனம் செலுத்துதல்.
* வீட்டிற்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய உயர்ந்த மரங்களை வெட்டுதல்.
* காற்றுவீசும்போது விழக்கூடிய, உடையக்கூடிய பொருட்களைப் பாதுகாப்பாக வைத்தல்.
* வெள்ளப்பெருக்கு நிலை ஏற்படுமாயின் பாதுகாப்பாக இருக்கக்கூடிய உயரமான இடத்தைத் தெரிவுசெய்து, அங்கு செல்வதற்குரிய வழியையும் அறிந்து வைத்திருத்தல்.
* அவசர நேரத்தில் பயன்படுத்தக்கூடிய பொருட்களான குடிநீர், முதலுதவி மருந்துகள், உலர் உணவுகள், மின்சூழ், தீப்பெட்டி, மெழுகுவர்த்தி, அவசரத்தொலைபேசி இலக்கங்கள் என்பவற்றைத் தம்முடன் வைத்திருத்தல்.
* சிறுபிள்ளைகளை வெளிச்செல்ல அனுமதிக்காதிருத்தல்.
* வாகனங்களைப் பாதுகாப்புள்ள இடங்களில் நிறுத்தி வைத்தல்.
* உடையணிகள், பெறுமதியான பொருட்கள் போன்றவற்றைப் பொருத்தமான வகையில் மூடி உயரமான இடங்களில் வைத்தல்.

### சூறாவளி ஏற்படும்போது

* சகல மின் உபகரணங்களின் செயற்பாட்டை நிறுத்தி வைத்தல்.
* வீட்டினுள்ளேயே இருத்தல்.
* காற்று குறைவடைந்தாலும் சூறாவளி நின்றுவிடவில்லை என்பதை உணர்தல்.
* சூறாவளியின் தாக்கம் முழுமையாக நீங்கிவிட்டது என அறிவித்தல் கிடைக்கும்வரை அமைதிகாத்தல்
* வாகனத்தில் சென்றுகொண்டிருப்பீர்களாயின் பாதுகாப்பான இடமொன்றில் வாகனத்தை நிறுத்துதல்.

### சூறாவளி ஏற்பட்ட பின்னர்

* பாதிக்கப்பட்ட மின் உபகரணங்களைப் பயன்படுத்தாதிருத்தல்.
* தகவல்களை அறிவதற்காக வானொலியைச் செவிமடுத்தல்.
* பாதிக்கப்பட்ட மின்கம்பங்கள், பாலங்கள், கட்டடங்கள் என்பவற்றுக்கு அருகில் செல்லாதிருத்தல்.
* பாதுகாப்பான நிலை உருவாகும்வரை வெளியே செல்லாதிருத்தல்.
* போதையூட்டும் பொருட்கள், பானங்களை அருந்தாதிருத்தல்.

## 4.7 விபத்து மற்றும் அனர்த்தங்களுடன் தொடர்புடைய அமைப்புக்கள்

விபத்துக்களும், அனர்த்தங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களுடன் தொடர்புடைய அமைப்புக்கள், நிறுவனங்கள் என்பன குறித்து அறிந்திருப்பதும் முக்கியமானது. அனர்த்தங்களைச் சிறப்பாக முகாமை செய்வது தொடர்பில் அத்தகைய அமைப்புக்களிடமிருந்து கிடைக்கப்பெறும் உதவிகள் மிகவும் அவசியமானவை. அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுபற்றி சட்ட ஒழுங்கு விதிகளும் முறைகளும் அநேக நாடுகளில் இன்று ஏற்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையிலும் அதுபோன்ற ஒரு சட்டதிட்ட வழிமுறை காணப்படுகிறது.

விபத்து, அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நிறுவனங்கள், அமைப்புக்கள் சில கீழே தரப்படுகின்றன.

* அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு
* வைத்தியசாலை / திடீர் விபத்துப் பிரிவு
* பொலிஸ் நிலையம்
* தீயணைப்பு தடுப்புப் பிரிவு
* அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம்
* சென்.ஜோன்ஸ் அம்பியுலன்ஸ் சேவை
* சுகாதாரப் பராமரிப்பு சேவை
* அத்தியாவசிய சேவைகள் திணைக்களம்
* சிவில் பாதுகாப்பு சேவைப்பிரிவு
* பிரதேச செயலகங்கள்

## 4.5 விபத்து மற்றும் அனர்த்த சந்தர்ப்பங்களின் போது செயற்படவேண்டிய வழிமுறைகள்

பல்வேறு சந்தர்ப்பங்களில் நாம் எதிர்கொள்கின்ற விபத்துக்கள் மற்றும் அனர்த்தங்கள் பற்றி இப்போது நீங்கள் தெளிவு பெற்றிருப்பீர்கள். அத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செயற்படவேண்டிய உரிய வழிமுறைகள் குறித்து விளக்கம் பெற்றிருப்பதும் அவசியமானதாகும். மிகவும் முக்கியமான விடயம் விபத்துகள் மற்றும் அனர்த்தங்கள் நேரும் போது குழப்பமடையாது மிகவும் நிதானத்துடனும், அவதானத்துடனும் செயற்பட வேண்டியுள்ளது. மிகவும் அவசியமாகும் அனர்த்தங்கள் நிகழும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மக்கள் கூடி நிற்பதற்கும் அவற்றைப் பார்ப்பதற்கும் முயற்சிப்பதே அதிகமாக காணக்கூடியதாக உள்ளது. அத்தகைய சந்தர்ப்பத்திற்கு ஓர் உதாரணமாக வாகன விபத்து ஏற்பட்டு காயப்பட்டவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்கையிலும், பொலிசார் சட்ட ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது ஒத்துழைப்பு வழங்குவதும் எமது கடமையாகும். மக்கள் கூடி நிற்பது அத்தகைய நடவடிக்கைகளை விரைவாகவும், அவசரமாகவும் செய்வதற்குத் தடையை ஏற்படுத்துகின்றது.



4.5 மண்சரிவு

அதேபோன்று அநேகமான சந்தர்ப்பங்களில் இயற்கையான மற்றும் மனித நடவடிக்கைகள் காரணமாக ஏற்படக்கூடிய விபத்து ஒரே தடவையில் நிறைவுறாது பல விளைவுகளையும் ஏற்படுத்தி விடுகிறது. உதாரணமாக: மண்சரிவு போன்ற சந்தர்ப்பங்கள் அல்லது குண்டு வெடிப்பு நிகழ்வுகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அதனைப்



இலவச விநியோகத்திற்காக

பார்ப்பதற்காக மக்கள் ஒன்று கூடுதல் மேலும் அதிகமானோரைப் பாதிப்புக் குள்ளாகச் செய்துவிடுகிறது. எனவே தேவையற்ற விதத்தில் அவ்வாறான இடங்களில் ஒன்றுகூடுவதைத் தவிர்த்தல் வேண்டும்.

தொடர்ந்து தொடர்புசாதனங்களோடு இணைந்து, விபத்துக்களையும் அனர்த்தங்களையும் தடுப்பதற்காக தினமும் வெளியிடப்படும் வானிலை அறிக்கைகளைக் கவனித்து அவை தொடர்பாக அவதானத்துடன் இருப்பது மிகவும் உசிதமானது. அத்துடன் உடனடியாகச் செயற்படுவதற்கு வழங்கப்படும் ஆலோசனைகளையும் பின்பற்ற வேண்டும். இயற்கையான சூழலில் ஏற்படக்கூடிய சில மாற்றங்கள் தொடர்பாக அவதானத்துடன் இருப்பதன் மூலமும் அனர்த்தங்களைத் தடுப்பதற்கு முடியும். உதாரணமாக: மண்சரிவு ஏற்பட முன்னர் அப்பிரதேசத்தில் காணப்படக்கூடிய அறிகுறிகளை உரிய வகையில் அறிந்து கொள்வதன் மூலம் அனாவசிய உயிரிழப்புக்களைத் தடுத்துக் கொள்ளலாம்.

**இயற்கைச்சூழலில் ஏற்படும் மாற்றங்களை மனிதர்களைவிட உயிரினங்கள் மிக விரைவில் தெரிந்து கொள்கின்றன. உயிரினங்களின் நடத்தைகள், செயற்பாடுகள் தொடர்பாக அவதானமாக இருப்பது முக்கியமானது. உதாரணமாக: கடந்த சுனாமி கடற்பேரலை அனர்த்தத்தின்போது மரணித்த மனிதர்களின் எண்ணிக்கையைவிட உயிரினங்கள், விலங்குகளின் எண்ணிக்கை மிகவும் குறைவானது என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. சுனாமி போன்ற அனர்த்தங்கள் நிகழுமுன்னர் ஏற்படும் சூழல் நிலைமை குறித்து உயிரினங்கள் தெரிந் திருப்பதே இதற்குக் காரணமாகும் என விஞ்ஞானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.**

**அதே போன்று இயற்கைச் சூழலில் காணப்படும் பறவையினங்கள் சிலவேளைகளில் பல்வேறு வெளிப்பாடுகளையும் காட்டுகின்றன. எமது மூதாதையர்கள் வாழ்க்கையை இவற்றோடு ஒன்றித்து வாழப் பழகி யிருந்தனர். இத்தகைய வேறுபாடுகளை அவர்கள் நன்கு விளங்கி வைத்திருந்தனர். ஈசல்கள் சப்தமிட்டுப் பறத்தல், மழைக் குருவி கத்துதல் போன்றன மழை பெய்வதற்கு முன்னருள்ள சமிக்ஞைகளாக அவர்கள் அறிந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.**

எனவே அனர்த்தங்களுக்கு, விபத்துக்களுக்கு உள்ளாகும்போது அர்ப்பணிப்புடன் செயற்பட்டு உரியவகையில் தீரமானங்களை மேற்கொண்டு நடந்து கொள்வது பற்றிய திறன்களை நாம் அனைவரும் பெற்றிருப்பது அவசியம்.

இத்தகைய சந்தர்ப்பங்களில்,

* முதலுதவி வழங்குவது அவசியமானதா?
* மேலதிக சிகிச்சைகளை வழங்குவதற்காக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல வேண்டுமா?
* யாருக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும்?
* எந்தெந்த அமைப்புக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்?
* அனர்த்தத்திற்கு உட்பட்டோர்களது அடையாளங்களை எவ்வாறு நிரூபிப்பது?

போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஒவ்வொரு விபத்து நேரும் சந்தர்ப்பங்களின் போதும் அவற்றுக்கு உரிய வகையில் மிகவும் அவதானத்துடனும், புத்திசாதுரியத்துடனும், செயற்படுவதன் மூலம் விபத்து மற்றும் அனர்த்தங்களை உரியவகையில் முகாமை செய்துகொள்ள முடியும். இதன் மூலம் உங்களதும் பிறரதும் உயிரையும், உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்வதற்கும், சிறந்ததொரு சமூக வாழ்வை ஏற்படுத்திக் கொள்வதற்கும் உறுதிவாய்ந்த பொருளாதாரத்தையுடைய நாட்டினைக் கட்டியெழுப்புவதற்கும் முடியுமாக இருக்கும்.

### செயற்பாடு IV

உமது வீட்டுக்கு அருகாமையில் முச்சக்கர வண்டி ஒன்று பஸ்வண்டி ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. முச்சக்கர வண்டியினுள் சாரதி அகப்பட்டுள்ளார் என்ற செய்தி உங்களுக்குக் கிடைக்கிறது. இச் சந்தர்ப்பத்தின்போது உடனடியாக நீங்களும் அயலவர்களுடன் சேர்ந்து செயற்பட வேண்டிய விதம் குறித்து விளக்குங்கள்.

**சாராம்சம்**

* வாழ்க்கையின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பல்வேறு இடங்களில் விபத்து அல்லது அனர்த்தம் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன.
* விபத்துகளும் அனர்த்தங்களும் ஏற்படுவதை முழுமையாகத் தடுத்துநிறுத்த முடியாது.
* அனர்த்தம் தொடர்பாக அறிவுறுத்துவதன் மூலம் அவற்றைத் தடுப்பதற்கும் அவற்றின் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்ளவும் முடியும்.
* அனர்த்தமொன்று ஏற்படும் சந்தர்ப்பத்தில் புத்திசாதுரியமாகச் செயற்படுவது சிறந்த பிரஜை ஒவ்வொருவரதும் கடமையும் பொறுப்புமாகும்.
* விபத்துகளும், அனர்த்தங்களும் ஏற்படுவது குறித்து முற்கூட்டியே அவதானமாக இருப்பதன் மூலம் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளில் உதவுவதற்கும் நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதற்கும் ஏதுவாகிறது.

**குழு ஒப்படை**

வகுப்பிலுள்ள மாணவர்கள் ஐந்து குழுக்களாக பிரிந்து விபத்து, அனர்த்தம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் நடந்து கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்து ‘‘மக்களை விழிப்பூட்டல்’’ பத்திரிகை ஒன்றைத் தயாரியுங்கள்.

1. மண்சரிவு
2. வெள்ளப்பெருக்கு
3. இடிமின்னல் பாதிப்பு
4. இரசாயனப் பொருட்களால் ஏற்படும் நச்சுத்தன்மை
5. வாகன விபத்து

மேற்படி பத்திரிகையைத் தயாரிக்கும்போது கீழே காணப்படும் விடயங்கள் குறித்து உமது அவதானத்தைச் செலுத்துங்கள்.

- விபத்துக்களைத் தடுத்தல்
- முன்னாயத்த நடவடிக்கைகள்
- விபத்து நேரும்போது செயற்பட வேண்டிய முறை
- விபத்து நிகழ்ந்த பின்பு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்